*கவனிக்க .- 2015.06.19 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1921 - 2015 ජූනි මස 26 වැනි සිකුරාදා - 2015.06.26**

*1921 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு யூன் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 914 |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | | |
| துணைவிதிகள் | - | | |
| பதவிகள் - வெற்றிடம் | - | | |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2015, யூலை மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, யூலை மாதம் 03 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

திருத்தம்

**வடமேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு**

*2015.06.05 ஆந் திகதிய 1918 ஆம் இலக்க வர்த்தமானியில் 06-193 ஆம் இலக்க அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட விடயம் பின்வருமாறு திருத்தப்பட வேண்டும்.*

*3.2*

(ஆ) **பயிலுநர் பதவி**

*விளையாட்டு அலுவலர் III பதவிக்கு ஆட்சேர்க்கும்போது, போதியளவு விண்ணப்பதாரிகள் இல்லாத பட்சத்தில், தொழிற் தகைமைகள் (i) இல் குறிப்பிட்டுள்ளபடி சர்வதேச போட்டிகளில் பங்குபற்றியவர்களுக்கு / விளையாட்டு அமைச்சினால் நடாத்தப்படும் தேசிய மகா விளையாட்டு நிகழ்வொன்றில் ஏதாவது ஒரு விளையாட்டில் தேசிய மட்டத்தில் 1, 2, 3 இடங்களைப் பெற்றுள்ளவர்களுக்கு மேற்கூறப்பட்டுள்ள கல்வித் தகைமைகளின் கீழ், (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள க. பொ. த. (உ. த.) பரீட்சையில் 1 பாடத்தில் மட்டும் சித்தியடைந்து இருத்தல் மற்றும் 3.1 (அ) (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் சேவைகள் உட்பட்டு 3 வருடங்கள் பூரணமாகும் அடிப்படையில் இந்தப் பதவிக்காக விண்ணப்பிக்கலாம்.*

*அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட அலுவலர்கள் பயிலுநர் பதவிக்கு சேர்த்துக்கொள்ளப்படுவதோடு 3 வருட காலத்துள் உரிய தகைமையை பூர்த்தி செய்துகொள்ள வேண்டும். இந்த தகைமையை பூர்த்தி செய்த நாள் தொடக்கம் விளையாட்டு அலுவலர் III ஆம் வகுப்புக்கு நியமிக்கப்படுவார்.*

*உரிய காலத்தில் உரிய தகைமைகளை பூர்த்தி செய்ய முடியாது போனால், அந்த நபருடைய சேவையை இரத்துச் செய்யும் அதிகாரம் நியமனப் பொறுப்பதிகாரிக்கு உரியது. அதே போன்று சாதாரண காரணங்களைக் கருத்தில் கொண்டு, திணைக்கள தலைவரின் சிபாரிசின் படி தேவையான தகைமைகள் பூரணப்படுத்துவதற்காக ஒரு வருடத்துக்கு குறையாத கால எல்லையை நீடிக்கும் அதிகாரம் நியமனப் பொறுப்பதிகாரிக்கு உரியது.*

*8. விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2015.07.13 ஆகும்.*

காந்தி வேஹெல்ல,
செயலாளர்.
வடமேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு.

*2015, யூன் 10.*

*6-767*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.